**27.03.2023**

**அ.வ.எண். 583/2014**

**வா.சா.5 சந்திரன் அவர்களின் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். கோவிந்தசாமியின் மருமகன் சதாசிவம் கோவிந்தசாமி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நிலத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். கோவிந்தசாமியிடமிருந்து சொத்து கோரி சதாசிவம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் விவரங்கள் எனக்கு தெரியாது. பழனி என்பவர் எனது சொத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர். அவர் தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

2. கோவிந்தசாமி சுமார் 35 வருடங்களுக்கு முன்பு தர்மலிங்க கவுண்டர் என்பவரிடமிருந்து சொத்தினை கிரையம் வாங்கினார். கோவிந்தசாமி என்பவர் சதாசிவம் பெயரில் ஒரு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை, அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்ததாக தான் கோவிந்தசாமி என்னிடம் கூறினார். எப்போது கூறினார் என்றால் பத்திரம் எழுதியவுடன் கூறினார், எப்போது என்று ஞாபகம் இல்லை.

3. சுமாராக கோவிந்தசாமி எப்போது சொன்னார் என்றால் அவர் இறப்பதற்கு 4 வருடத்திற்கு முன்பு கூறினார். கோவிந்தசாமி இறப்பதற்கு நான்கு வருடத்திற்கு முன்பு அடமானப்பத்திரம் எழுதி என்னிடம் கூறினார் என்றால் சரிதான். சதாசிவம் அவரது மனைவி பெயரில் தாவா சொத்தினை கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. இன்றைய தேதியில் தாவா சொத்திற்கான பட்டா பழனி பெயரில் உள்ளது. அந்த பட்டாவினை நான் பார்த்துள்ளேன். அதன் எண் நான் மறந்துவிட்டேன். அந்த பட்டாவினை 4 மாதத்திற்கு முன்பு பார்த்தேன்.

4. இன்றைய தேதியில் தாவா சொத்திற்கான பட்டா சதாசிவம் பெயரில் ஆதிலட்சுமி அம்மாள் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக சொத்து யாருக்கு உரிமையாகி அனுபவித்து வருகிறார்களோ அவர்கள் பெயரில் தான் பட்டா வழங்கப்படும் என்றால் பட்டா எப்படி வேண்டுமானாலும் வழங்கப்படலாம். எனது சொத்திற்கு எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. எவ்வாறு பட்டா பெற்றேன் என்றால் எனது தகப்பனார் பெயரில் இருந்ததை நான் எனது பெயருக்கு மாற்றினேன்.

5. கிராமநிர்வாக அலுவலர் விசாரணை செய்து ஆவணங்கள் அடிப்படையில் தான் வருவாய் துறையில் பட்டா வழங்கப்படும் என்றால் சரியல்ல. அனுபவத்தின்

அடிப்படையில் தான் பட்டா வழங்குவார்கள். பழனி தான் அனுபவித்து வருகிறார். தாவா சொத்திற்கு பக்கத்தில் எனது நிலம் உள்ளது என்று காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கை நான் பார்த்ததில்லை. தாவா சொத்திற்கான அடங்கல் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

6. பொதுவாகவே யார் பெயரில் பட்டா தாக்கலாகி அனுபவித்து வருகிறார்களோ அவர்கள் பெயர் தான் அடங்கல் கணக்கில் குறிப்பிடுவார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு யார் வரி செலுத்தி வருகிறார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தினை பழனி அனுபவித்து வருகிறார் என்பதற்கு வருவாய் ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை. வருவாய் ஆவணங்கள் எதையும் பார்க்காமல் பழனி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொல்கிறேன் என்றால் சரிதான்.

7. கோவிந்தசாமியின் சொத்தில் பழனியை தவிர மற்ற வாரிசுகளுக்கு உரிமை இல்லை என்று எதன் அடிப்படையில் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் மற்ற 5 நபர்கள் சேர்ந்து பழனி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவ்வாறு கூறியுள்ளேன். இந்த வழக்கினை யார் யார் மீது தாக்கல்

செய்துள்ளார்கள் என்ற விவரமும் வழக்கின் விவரமும் தாவா சொத்தின் விவரமும் தெரியாமல் தாவா சொத்தின் ஆவணங்களை பார்க்காமல் பழனிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.